# யாழ் மாவட்டத்திலுள்ள வலிகாமப்பிராந்தியத்தில் யுத்தத்திற்கு பின்னர் சுற்றுலா விடுதிகளின் வளர்ச்சியும் சவால்களும்

பத்மாசனி குலராஜசிங்கம்

## ஆய்வுச் சுருக்கம்

சுற்றுலா என்பது பொழுதுபோக்கிற்கும் கலாசார தேவைகளை நிறைவேற்றுவதற்கும், ஓய்வு எடுப்பதற்கும் அவசியமாக காணப்படுவதுடன் சமூக பொருளாதார அபிவிருத்தியில் முக்கியத்துவம் வாய்ந்ததாகக் காணப்படுகிறது. அந்த வகையில் யாழ் மாவட்டத்தில் யுத்தத்தின் பின் சுற்றுலாப்பயணிகளின் வருகையும் அதிகரித்து கொண்டிருக்கும் வேளையில் யாழில் பல எண்ணிக்கையான விடுதிகளும் அதிகரித்தன. இவ் விடுதிகள் அதிகரித்த நிலை, யுத்தத்தின் பின் சுற்றுலா விடுதிகளின் வசதிகளின் வளர்ச்சி, சுற்றுலா விடுதிகள் எதிர்கொள்ளும் சவால்கள் போன்ற வினாக்களை உள்ளடக்கியதாக யாழ் வலிகாமப் பிராந்தியத்திலுள்ள முதன்மையான 9 சுற்றுலா விடுதிகள் ஆய்வுக்காக தெரிவு செய்யப்பட்டன. இவ் விடுதிகளின் அறை எண்ணிக்கையின் வளர்ச்சி, அறையின் வசதி, மண்டப வசதி, ஊழியர், பயிற்சியளிக்கப்பட்ட பணியாளர், சுற்றுலா வழிகாட்டி, சுற்றுலாப் பயணிகளின் வருகை, பொழுதுபோக்கு வசதி, போக்குவரத்து வசதி, உணவு, உணவு வழங்கல், அறைகளின் வாடகை, சுற்றுலா விடுதிகளின் மொழி வளர்ச்சி போன்ற விடயங்களையும் சுற்றுலா விடுதிகள் எதிர்கொள்ளும் சவால்கள் ஆகும். இச்சவால்களை வெற்றி கொள்வதற்கான பரிந்துரைகளும் இவ் ஆய்வின் மூலம் கண்டறியப் பட்டுள்ளது.

திறவுச்சொற்கள்: சுற்றுலா, கலாசாரம், பொருளாதார அபிவிருத்தி, சுற்றுலாவிடுதி, பொழுதுபோக்கு மற்றும் சவால்கள்.

## ஆய்வு அறிமுகம்

2009 இல் யுத்தம் முடிவடைந்ததன் பின் வட பகுதியில் அபிவிருத்தி படிப் படியாக ஆரம்பிக்கப்பட்டது. 2009 இற்கு பின் சுற்றுலாப்பயணிகளின் இலங்கைக்கான வருகை அதிகரித்துக் காணப்பட்ட அதே வேளை யாழ்ப்பாணத்திற்கு வரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையும் கணிசமானளவு காணப்பட்டது. ஆண்டு தோறும் சுற்றுலாப்பயணிகளின் வீதம் அதிகரித்தது. இந்த வகையில் சுற்றுலா விடுதிகளின் அதிகரிப்பு கணிசமானளவு உயர்வடையத் தொடங்கியது. சுற்றுலாப் பயணிகளின் தேவை அதிகரிப்பு காரண மாகவும் வடபகுதி மக்களின் தேவை அதிகரிப்பு காரணமாகவும் தேவையை அறிந்த முயற்சியாளர்கள் இத்துறையில் நாட்டம் காட்டியதோடு தமது வியாபாரத் தையும் இத்துறையில் ஆரம்பிக்கத் தொடங் கினர். 1980ற்கு முற்பட்ட காலத்தில் யாழ் மாவட்டத்தில் குறிப்பிடக்கூடிய அளவே சுற்றுலா விடுதிகள் காணப்பட்டன. சுற்றுலா விடுதிகளிற்கு பல்வேறுபட்ட வரைவிலக் கணங்கள் காணப்பட்டாலும் விடுதி உரிமை யாளர் சட்டம் 158ஆம் பகுதி ஓர் விடுதி பற்றிய தெளிவான வரைவிலக்கணத்தை வழங்கு கின்றது. விடுதி என்பது "வரவேற்கப்படு வதற்கு தகுந்த நிலையிலும் தனக்கு

வழங்கப்படும் சேவைகள் மற்றும் வசதிகளுக்கு ஒரு குறிப்பிட்ட நியாயமான தொகையினை வழங்கக் கூடிய மற்றும் வழங்க விரும்புகின்ற எந்த ஒரு நபருக்குமான படுக்கையறை வசதிகளை வழங்குகின்ற ஓர் உரிமையாளரால் நடாத்தப்படுகின்ற நிறுவனமாகும்" ஒரு சுற்றுலா விடுதி சுற்றுலாப் பயணிகள் மற்றும் விருந்தினர்களுக்கு தங்குமிடம், உணவு மற்றும் ஏனைய சேவைகளை வழங்குகின்ற ஓர் அமைப்பு ஆகும். இது குறுகியகால ஒப்பந்த அடிப்படையில் தங்குமிடத்தை வழங்குகின்றது. விருந்தினர்களின் விடுதிகள் பற்றிய மனப்பாங்கினை தீர்மானிக்கின்ற பிரதான காரணி விடுதிகளில் வழங்கப்படுகின்ற சேவையின் தரமாகும். விடுதிகள் மேலதிகமாக பல விருந்தினர் சேவைகளை வழங்குகின்றன. அவையாவன உணவு, பானங்கள், விளையாட்டு வசதிகள், நீந்துவதற்கான இடம், மூலிகை குளியல், உடற் பயிற்சிக்கூடம் போன்ற பல சேவைகளை வழங்குகின்றன.

## ஆய்வின் நோக்கம்

இவ் ஆய்வானது சுற்றுலா விடுதித் துறையின் அபிவிருத்தியினூடாக யாழ் மாவட்டத்தின் பொருளாதார துறையை அபிவிருத்தி செய்வதனை நோக்கமாகக் கொண்டு காணப்படுகின்றது. இச்சுற்றுலா விடுதித் துறையின் வளர்ச்சிக்கு தடையாக இருக்கும் காரணிகளை இனங்கண்டு அவற்றின் வழி வகைகளை ஆராய்வதே இதன் நோக்கமாகும். இக் காலப்பகுதியில் சுற்றுலா விடுதித்துறையின் வளர்ச்சியினையும் அவை எதிர்கொள்ளும் சவால்களையும் எடுத்தியம்புவதே நோக்கமாகக் கொண்டுள்ளது.

## ஆய்வுப் பிரதேசம்

இலங்கையின் வட பகுதியில் அமைந்துள்ள 1025 சதுர கிலோமீற்றர் பரப்பை கொண்டது யாழ் மாவட்டம். இவ் யாழ்ப்பாணக் குடாநாட்டின் ஒரு புவியியற் பிரிவு வலிகாமமாகும் இவ் வலிகாமப் பகுதியினை ஆய்வுப்பிரதேசமாகக் கொண்டு இவ் ஆய்வு மேற்கொள்ளப்படுகின்றது.

## ஆய்வுப் பிரச்சினை

யாழ் மாவட்டத்தில் சுற்றுலா விடுதித் துறையை மேம்படுத்துவதற்கு பாரியளவு முதலீடுகள் அவசியமாகக் காணப்படுகின்றன. வளங்களின் உட்கட்டமைப்பு வசதிகளில் உள்ள பிரச்சினைகளை நோக்கின் யாழ் மாவட்டத்தின் உட்கட்டமைப்பு வசதிகள் போதியளவில் காணப்படவில்லை. அழிவடைந்த நிலையில் இருந்த யாழ் மாவட்டத்தின் சுற்றுலாத்துறையை போருக்கு பின்னர் மீள் கட்டியெழுப்புவதற்கான அமைப்புகளும் உதவிகளும் குறைந்த அளவிலேயே காணப்படுகின்றன. சுற்றுலா விடுதிகளினை முகாமை செய்வதில் போதிய அறிவின்மை காணப்படுகின்றமை.

## ஆய்வு கருதுகோள்

யாழ் மாவட்டத்தில் இன்று சுற்றுலா பயணிகளின் வருகை மூலம் சுற்றுலா விடுதிகளில் எத்தகைய மாற்றங்கள் நிகழ்கின்றன, அதிகரித்து காணப்படும் சுற்றுலா விடுதிகளை முகாமை செய்வதில் எவ்வாறான இடர்கள் ஏற்படுகின்றன என ஆராய்தல் கருத்துடையதாகும்.

யாழ் மாவட்டத்தில் யுத்தத்தின் பின் சுற்றுலாப் பயணிகளின் வருகை அதிகரித்துள்ளமையால் சுற்றுலா விடுதிகளின் வளர்ச்சியும் அதிகரித்துள்ளன.

சுற்றுலா விடுதிகளில் வளர்ச்சி காணப்பட்டாலும் அவை பல்வேறு விதமான சவால்களையும் எதிர்நோக்குகின்றன.

மேல்வரும் விடயங்கள் இவ் ஆய்வில் கருதுகோள்களாக காணப்படுகின்றன.

## ஆய்வு முறையியல்

யாழ் மாவட்டத்தில் சுற்றுலா விடுதிகளின் வளர்ச்சியும் சவால்களும் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட இந்த ஆய்வானது வெறுமனே தரவுகள், புள்ளி விபரங்கள் அல்லாமல் நேரடி கள ஆய்வாகவும் அமைகின்றது.

ஆய்வினை மேற்கொள்கின்ற போது முழுமையாக ஆய்வுப்பிரதேசத்தை - ஆய்வுக்கு உட்படுத்த முடியாத சூழ்நிலையில் ஆய்வுகுடியை பிரதிபலிக்கக்கூடிய பொருத்தமான வகையில் ஆய்வுக் குடியிலிருந்து ஒரு பகுதி விடுதிகளின் வசதிகள் அடிப்படையில் ஆய்வுக்கு உட்படுத்தப்படுத்தப்பட்டுள்ளது. அந்த வகையில் இவ் ஆய்வானது யாழ் மா்வட்டத்தின் வலிகாமப்பிராந்தியத்தில் உள்ள Tilko, Jaffna City Hotel, Green Grass Hotel, U.S Hotel, P.J Hotel, Jaffna Heritage Hotel, Gnanams Hotel, Subash Hotel, Hotel Lux Etoiles, Thalsevena, Holiday Resort ஆகிய சுற்றுலா விடுதிகள் ஆய்வுக்களமாகத் தெரிவு செய்யப்பட்டு ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

யாழ் வலிகாமப் பிராந்தியத்தில் 50இற்கு மேற்பட்ட விடுதிகள் காணப்பட்ட போதிலும் அவை சுற்றுலா விடுதிகளிற்கான தரப்படுத்தலில் அடங்காத காரணத்தினால் மேற்குறிப்பிட்ட விடுதிகள் ஆய்வுக்களமாக தெரிவு செய்ப்பட்டுள்ளன. சுற்றுலா விடுதிகள் என நோக்கும் போது அங்கு உணவு விடுதி, 20ற்கு மேற்பட்ட தனித்தனி குளியலறை வசதிகளுடன் கூடிய அறை வசதி, மண்டப வசதி, பொழுதுபோக்கு வசதிகளான நீச்சல் தடாகம், மதுபானகூடம், உடற்பயிற்சி கூடம், சிறுவர் விளையாட்டு பூங்கா போன்ற பொழுதுபோக்கு வசதிகளில் ஏதாவது ஒன்று காணப்படல் வேண்டும்.

இந்த வகைப்பாட்டிற்குள் வலிகாமத்தில் உள்ள ஏனைய விடுதிகள் அடங்காத காரணத்தினால் மேற்குறிப்பிட்ட சுற்றுலா விடுதிகள் ஆய்வுக்களமாக தெரிவுசெய்யப்பட்டுள்ளன. நிகழ்தகவல் மாதிரி எடுப்பு முறைகளில் ஒன்றான வசதி கருதிய மாதிரி எடுப்பு முறையினைப் பயன்படுத்தி இவ் விடுதிகள் தெரிவுசெய்யப்பட்டுள்ளன.

யாழ் வலிகாமப் பிராந்தியத்திலுள்ள மொத்த விடுதிகள்

- அதிக வசதி கொண்ட சுற்றுலா விடுதிகள் 09
- குறைந்த வசதி கொண்ட சுற்றுலா விடுதிகள் 42

## தரவு சேகரித்தல்

முதல்நிலைத்தரவுகளாக நேரடி அவதானம், நேர்காணல் போன்ற முறைகளில் தரவுகள் பெறப்பட்டன.

### நேர்காணல்

இவ் ஆய்வு தொடர்பாக யாழ் மாவடட்டத்தில் வலிகாமப் பிராந்தியத்தில் உள்ள சுற்றுலா விடுதிகளில் முகாமையாளர்களிடம் நேர்காணப்பட்டது. நேர்காணலின் போது சுற்றுலா விடுதிகள் பற்றிய முழுத்தரவுகளும் பெறப்பட்டன. அதாவது சுற்றுலா விடுதிகள் ஆரம்பிக்கப்பட்ட ஆண்டு, ஆரம்பிக்கப்பட்ட வருடத்தில் இருந்து ஒவ்வொரு வருடமும் அதன் வளர்ச்சி படிநிலை, சுற்றுலா விடுதிகளில் காணப்படும் வசதிகள், அறைகளில் உள்ள வசதிகள் மற்றும் சுற்றுலா விடுதிகள் எதிர் கொண்டு வரும் சவால்கள் என்பன நேர்காணலின் போது பெறப்பட்டது. நேர்காணலின் போது அட்டவணைப்படுத்தப்பட்ட வினாக்கள் தவிர்ந்த உப வினாக்களை வினாவுவதன் மூலமும் மேலதிக தரவுகளினைப் பெற்றுக்கொள்ளக்கூடியதாக

இருந்தது. நேர் காணலின் போது ஒலிப்பதிவுக் கருவிகள் பயன்படுத்தப்பட்டு தரவுகள் பதியப்பட்டன. பல விடுதிகளில் ஒலிப்பதிவு கருவிகள் பயன் படுத்துவதற்கு தடை விதிக்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

**நேரடி அவதானம்**

ஆய்வுக்கான தேடல்களில் முழுமை யான ஈடுபாடு அவசியமானது. நேரடி அவதானத்தின் மூலம் விடுதிகளில் கட்டட அமைப்பு, விடுதியில் உள்ள வசதிகள், அறைகளில் உள்ள வசதிகள், பொழுது போக்கு வசதிகள் மற்றும் வாடிக்கையாளர் களினை வரவேற்கும் தன்மை என்பன நேரடி அவதானத்தின் மூலம் அவதானிக்கப்பட்டது. நேரடி அவதானத்தின் போது விடுதி உரிமை யாளர்களின் அனுமதியுடன் விடுதிகளிலுள்ள வசதிகள், விடுதியின் தோற்றம் என்பன புகைப்பட கருவிகளினை பயன்படுத்தி புகைப்படங்கள் எடுக்கப்பட்டுள்ளன. இவை விடுதியில் உள்ள வசதிகள் பற்றிய நம்பகத்தன்மையினை உறுதிப்படுத்துவதாக காணப்படுகிறது.

இரண்டாம் நிலைத்தரவுகளாக இவ் ஆய்விற்கு நூல்கள், சஞ்சிகைகள், இணை யத்தள தரவுகள், கைத்தொழில் வாணிப சங்கத்தரவுகள் என்பன பயன்படுத்தப்படு கின்றன.

**தரவுப் பகுப்பாய்வு**

தரவுகளினை பகுப்பாய்வு செய்வதன் மூலமே துல்லியமான முடிவுகளினைக் காண முடியும். இவ் ஆய்வுக்காக தரவுகளிலிருந்து யாழ் மாவட்டத்தில் உள்ள சுற்றுலா விடுதிகளில் வளர்ச்சி நிலையினை காட்டும் முகமாக அட்டவணைகள் மூலம் வளர்ச்சிப் படிநிலைகள் காட்டப்பட்டுள்ளன.

அதாவது சுற்றுலா விடுதிகளின் எண்ணிக் கைகளில் ஏற்பட்ட விருத்தி, வசதிகள் மற்றும் பணியாளர்களின் வளர்ச்சி என்பன அட்ட வணைகள் மூலம் காட்டப்பட் டுள்ளன. மற்றும் விடுதிகள் எதிர் கொள்ளும் பிரச்சினைகள் அட்டவணைப்படுத்தப்பட் டுள்ளன. அவற்றிற்கான காரணங்கள் விபரண ரீதியாக விளக்கப் பட்டுள்ளன.

இவ் ஆய்விற்கு தேவையான தரவுகள் பெருமளவிற்கு முதல் நிலைத் தரவு களாகவே அமைகின்றன. ஏனெனில் முதல் நிலைத் தரவுகள் மூலம் உடனடியான தரவுகள் சேகரித்து தற்கால வளர்ச்சி யினையும் தற்போது விடுதிகள் எதிர் கொள்ளும் சவால்கள் தொடர்பான பகுப் பாய்வினை மேற்கொள்ள முடிவதுடன் அதனடிப்படையில் சுற்றுலா விடுதிகள் எதிர் கொள்ளும் சவால்களுக்கான தீர்வுகளையும் இனம்காணக்கூடியதாகவுள்ளது.

தரவுகளினை பகுப்பாய்வு செய்வதற்கு முன்னர் தரவுகளின் உண்மைத்தன்மை அறியப்பட்டு பெறப்பட்ட தகவல்கள், ஏமாற்றுகள், போலிகள் அற்றவை என்பதும் உறுதி செய்யப்பட்டன. இதன் பின்னரே தரவுகள் பகுப்பாய்வு செய்யப்பட்டன. தரவு களினை அலசி ஆராய்ந்து, ஒன்று சேர்க்க வேண்டியவற்றை வகைப்படுத்தியும் விமர் சித்தும் தரவுகள் பகுப்பாய்வு செய்யப்பட் டன்ளன. பேட்டிகள், அவதானித்தல் மூலம் பெறப்பட்ட முதன்மைத் தரவுகள் பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளன.

சுற்றுலா விடுதிகளின் வளர்ச்சி தொடர்பான பகுப்பாய்வு

சுற்றுலா விடுதிகளின் தோற்றம் தொடர்பான பகுப்பாய்வு

| சுற்றுலா விடுதிகளின் பெயர் | ஆரம்பிக்கப்பட்ட ஆண்டு |
|---|---|
| Lux etoiles Hotel & restaurant | 2006 |
| Gnanams Hotel | 2009* |
| Green grass Hotel & restaurant | 2009 |
| Tilko Jaffna city | 2010 |
| Thalsevana holiday resort | 2010 |
| Jaffna heritage hotel | 2012* |
| Subash tourist Hotel | 2012 |
| PJ Hotel | 2013 |
| U.S Hotel | 2014 |

*யுத்த முடிவைத் தொடர்ந்து யாழ்ப்பாணத்தில் வலிகாமம் பகுதியில் சுற்றுலா விடுதிகளை அமைப்பதனை நோக்கமாகக் கொண்டு 2009,2010,2012 காலப்பகுதிகளில் குறைந்தது இரண்டு சுற்றுலா விடுதிகள் அமைக்கப்பட்டதனை காணக்கூடியதாகவுள்ளது.

### 1.2 அறைகளின் வளர்ச்சி தொடர்பான பகுப்பாய்வு

| Rooms | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| Name of the hotels | 2006 | 2007 | 2008 | 2009 | 2010 | 2011 | 2012 | 2013 | 2014 | 2015 |
| Thalsevana | | | | | 30 | 34 | 34 | 39 | 42 | 46 |
| Jaffna Heritage | | | | | | | 9 | 12 | 12 | 20 |
| Gnanams | | | | 27 | 27 | 30 | 32 | 32 | 36 | 39 |
| Green Grass | | | | 5 | 26 | 26 | 29 | 29 | 46 | 61 |
| US Hotel | | | | | | | | | 12 | 22 |
| PJ Hotel | | | | | | | | 20 | 20 | 20 |
| Lux etoiles | 8 | 8 | 8 | 10 | 22 | 22 | 22 | 22 | 22 | 22 |
| Subash | | | | | | | 12 | 16 | 21 | 27 |
| Tilko Jaffna City | | | | | 22 | 30 | 42 | 49 | 54 | 62 |
| **Total Rooms** | **8** | **8** | **8** | **42** | **127** | **142** | **180** | **219** | **265** | **319** |

மூலம் : களவாய்வின் மூலம் பெறப்பட்டது

யாழ் மாவட்டத்தில் ஆரம்பத்தில் தோற்றம் பெற்ற சுற்றுலா விடுதிகளில் அறைகளின் எண்ணிக்கை மிகவும் குறைந்தளவிலேயே காணப்படுகின்றது. குறிப்பாக 2006 - 2008 வரையான காலப்பகுதியில் Luxetoiles எனும் சுற்றுலா விடுதியில் மட்டுமே அறைகள் காணப்பட்டன. யுத்தத்திற்குப் பின்னர் அறைகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளமையை அவதானிக்க முடிகின்றது.

### I.2 அறைகளில் உள்ள வசதிகள் தொடர்பான பகுப்பாய்வு

| Facilities in room | Facility in Room | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | Number of hotels | | | | | | |
| | 2009 | 2010 | 2011 | 2012 | 2013 | 2014 | 2015 |
| Air Condition | 1 | 3 | 5 | 7 | 8 | 9 | 9 |
| TV | 3 | 5 | 5 | 7 | 8 | 9 | 9 |
| Intercom | 1 | 2 | 5 | 7 | 8 | 9 | 9 |
| Wi - fi | | 1 | 2 | 2 | 5 | 6 | 7 |
| Tea coffee making facility | | | 2 | 4 | 5 | 7 | 9 |
| Mini bar | | 1 | 3 | 5 | 6 | 9 | 9 |
| Attached bath room | | 1 | 2 | 2 | 4 | 7 | 7 |
| Hot water | | 1 | 2 | 6 | 6 | 8 | 8 |
| Safety locker | 30 | 34 | 34 | 30 | 30 | 34 | 34 |

மூலம் : களவாய்வின் மூலம் பெறப்பட்டது

அறைகளில் உள்ள வசதிகள் தொடர்பான பகுப்பாய்வில் குளிரூட்டி, தொலைக்காட்சி, தேநீர் தயாரித்தல் முதலான வசதிகள் காணப்படுவதுடன் இவை ஆரம்பத்தில் மிகவும் குறைந்தளவிலேயே காணப்பட்டன. ஆனால் 2012 - 2015 வரையான காலப்பகுதியில் அதிகரித்துள்ளமையையும் அவதானிக்க முடிகிறது.

### 1.4 மண்டப வசதிகள் தொடர்பான பகுப்பாய்வு

| Halls | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| Name of the Hotels | 2006 | 2007 | 2008 | 2009 | 2010 | 2011 | 2012 | 2013 | 2014 | 2015 |
| Thalsevana | | | | | | 1 | 1 | 1 | 2 | 2 |
| Jaffna Heritage | | | | | | | | 1 | 1 | 1 |
| Gnanams | | | | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 1 |
| Green Grass | | | | 1 | 1 | 2 | 3 | 3 | 4 | 4 |
| US Hotel | | | | | | | | | 1 | 1 |
| PJ Hotel | | | | | | | | | | 1 |
| Luxetoiles | | | | | | | | | | 1 |
| Subash | | | | | | | 1 | 1 | 2 | 2 |
| Tilko Jaffna City | | | | | 1 | 1 | 1 | 1 | 2 | 3 |
| **Total Halls** | | | | **2** | **3** | **5** | **8** | **8** | **13** | **16** |

மூலம் : களவாய்வின் மூலம் பெறப்பட்டது

மண்டபங்களின் வசதி தொடர்பான பகுப்பாய்வில் ஆரம்பத்தில் மண்டப வசதிகள் இருக்கவில்லை. மாறாக காலப்போக்கில் மண்டப வசதிகள் அதிகரித்து காணப்படுகின்றது.

### 1.2 அறைகளில் உள்ள வசதிகள் தொடர்பான பகுப்பாய்வு

| | Facility in Room | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| **Number of chairs in a hall** | Number of Hotels | | | | | | |
| | **2009** | **2010** | **2011** | **2012** | **2013** | **2014** | **2015** |
| 100-300 | 1 | 1 | 2 | 3 | 3 | 4 | 5 |
| 301-500 | 1 | 1 | 1 | 2 | 2 | 4 | 6 |
| 501-1000 | | 1 | 2 | 2 | 3 | 5 | 5 |

மூலம் : களவாய்வின் மூலம் பெறப்பட்டது

மண்டபங்களின் இருக்கை தொடர்பான பகுப்பாய்வில் 100-1000 வரையான கதிரைகள் கொண்டதாக காணப்படுகின்ற போதிலும் 2010-2015 வரையான காலப்பகுதியில் 300-1000 இருக்கைகள் காணப்படுகின்றன.

## I.6 ஊழியர் தொடர்பான பகுப்பாய்வு

| Staff details | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| Name of the hotels | 2006 | 2007 | 2008 | 2009 | 2010 | 2011 | 2012 | 2013 | 2014 | 2015 |
| Thalsevana | | | | | 90 | 97 | 106 | 110 | 114 | 125 |
| Jaffna Heritage | | | | | | | 9 | 12 | 12 | 15 |
| Gnanams | | | | 14 | 14 | 15 | 17 | 17 | 20 | 22 |
| Green Grass | | | | 4 | 20 | 29 | 48 | 59 | 70 | 77 |
| US Hotel | | | | | | | | | 12 | 22 |
| PJ Hotel | | | | | | | | 3 | 6 | 15 |
| Luxetoiles | | | | | | 4 | 4 | 6 | 5 | 10 |
| Subash | | | | | | | 10 | 10 | 11 | 15 |
| Tilko Jaffna City | | | | | | 16 | 28 | 40 | 54 | 62 |
| **Total Staffs** | **4** | **4** | **6** | **23** | **150** | **182** | **243** | **280** | **323** | **381** |

மூலம் : களவாய்வின் மூலம் பெறப்பட்டது

யாழ் மாவட்டத்தின் வலிகாமப்பிராந்தியத்தில் உள்ள Tilko Jaffna City Hotel, Green Grass Hotel, U.S. Hotel, P.J Hotel. Jaffna Heritage Hotel, Gnanams Hotel, Subash Hotel, Hotel Lux Etoiles, Thalsevena ஆகிய சுற்றுலா விடுதிகளில் ஊழியர் தொடர்பான பகுப்பாய்வில் 2006 - 2009 வரை ஊழியர்கள் குறைந்தளவிலேயே காணப்பட்டும் 2010 - 2015 வரையான காலப்பகுதியில் ஊழியர்களின் எண்ணிக்கை கூடியளவு காணப்படுகின்றது.

## I.7 பயிற்சியளிக்கப்பட்ட பணியாளர் தொடர்பான பகுப்பாய்வு

| Trained Staff of Hotel | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| Name of the hotels | 2006 | 2007 | 2008 | 2009 | 2010 | 2011 | 2012 | 2013 | 2014 | 2015 |
| Thalsevana | | | | | 47 | 47 | 63 | 67 | 67 | 73 |
| Jaffna Heritage | | | | | | | 4 | 7 | 7 | 9 |
| Gnanams | | | | 3 | 3 | 4 | 6 | 6 | 6 | 7 |
| Green Grass | | | | 1 | 6 | 9 | 17 | 22 | 30 | 30 |
| US Hotel | | | | | | | | | 6 | 7 |
| PJ Hotel | | | | | | | | 1 | 3 | 4 |
| Luxetoiles | 1 | 1 | 2 | 2 | 5 | 6 | 6 | 8 | 8 | 11 |
| Subash | | | | | | | 3 | 3 | 4 | 7 |
| Tilko Jaffna City | | | | | 6 | 12 | 18 | 23 | 25 | 30 |
| **Total trained staff** | 1 | 1 | 2 | 6 | 67 | 78 | 117 | 137 | 156 | 178 |

மூலம் : களவாய்வின் மூலம் பெறப்பட்டது

ஆரம்பத்தில் பயிற்சியளிக்கப்பட்ட பணிப்பாளர்கள் LuxEtoiles சுற்றுலா விடுதியை தவிர ஏனைய சுற்றுலா விடுதிகளில் காணப்படவில்லை. Thalsevana, Tilko Jaffna city சுற்றுலா விடுதிகளில் 2010 இற்கு பின்னர் கூடியளவு பயிற்சியளிக்கப்பட்ட பணியாளர்கள் காணப்படுகின்ற போதிலும் ஏனைய சுற்றுலா விடுதிகளில் ஓரளவு பயிற்சியளிக்கப்பட்ட பணியாளர்களே காணப்படுகின்றனர்.

### I.8 சுற்றுலா வழிகாட்டி தொடர்பான பகுப்பாய்வு

| Trained Staff of Hotel | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| **Name of the hotels** | **2006** | **2007** | **2008** | **2009** | **2010** | **2011** | **2012** | **2013** | **2014** | **2015** |
| Thalsevana | | | | | | 2 | 2 | 3 | 3 | 4 |
| Jaffna Heritage | | | | | | | 2 | 2 | 3 | 3 |
| Gnanams | | | | 3 | 3 | 4 | 4 | 6 | 6 | 6 |
| Green Grass | | | | | 1 | 2 | 2 | 2 | 2 | 3 |
| US Hotel | | | | | | | | | 1 | 3 |
| PJ Hotel | | | | | | | | 1 | 2 | 2 |
| Luxetoiles | | | | | 2 | 2 | 2 | 2 | 3 | 3 |
| Subash | | | | | | | 2 | 2 | 3 | 3 |
| Tilko Jaffna City | | | | | 1 | 1 | 3 | 3 | 3 | 4 |
| **Total Tourist guidance** | | | | **3** | **7** | **11** | **17** | **21** | **26** | **31** |

மூலம் : களவாய்வின் மூலம் பெறப்பட்டது

சுற்றுலா விடுதிகளில் சுற்றுலா வழிகாட்டி தொடர்பான அறிவுறுத்தல்கள் எதுவும் ஆரம்பத்தில் வழங்கப்படவில்லை. 2010 இற்கு பின்னர் சுற்றுலா வழிகாட்டி தொடர்பான சிந்தனை வலுப்பெற்றதாக காணப்படுகின்றது.

## I.9 சுற்றுலாப் பயணிகளின் வருகை தொடர்பான பகுப்பாய்வு/ இது பணியாளர்கள் பற்றிய அட்டவணையாகும்

### 1.9 சுற்றுலாப் பயணிகளின் வருகை தொடர்பான பகுப்பாய்வு

| Trained Staff of hotel | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| **Name of the hotels** | **2006** | **2007** | **2008** | **2009** | **2010** | **2011** | **2012** | **2013** | **2014** | **2015** |
| Thalsevana | | | | | 30% | 35% | 45% | 50% | 50% | 55% |
| Jaffna heritage | | | | | | | 60% | 60% | 65% | 75% |
| Gnanams | | | | 50% | 50% | 60% | 65% | 65% | 70% | 75% |
| Green grass | | | | 60% | 65% | 65% | 70% | 75% | 75% | 75% |
| US hotel | | | | | | | | | 50% | 60% |
| PJ hotel | | | | | | | | 10% | 20% | 50% |
| Luxetoiles | 25% | 25% | 20% | 20% | 35% | 35% | 40% | 55% | 60% | 70% |
| Subash | | | | | | | 40% | 50% | 65% | 70% |
| Tilko Jaffna city | | | | | 40% | 50% | 55% | 60% | 70% | 80% |

சுற்றலாப் பயணிகளின் வருகையானது Luxetoiles சுற்றலா விடுதியை தவிர ஏனைய சுற்றுலா விடுதிகளில் காணப்படவில்லை. U.S Hotel சுற்றுலா விடுதியில் 2014 இற்கு பின்னர் சுற்றுலாப் பயணிகளின் வருகை காணப்படுகின்றது. ஏனைய சுற்றலா விடுதிகளில் 2010 இற்கு பின்னர் அதிகரித்த ஒன்றாக காணப்படுகின்றது.

## 1.10 பொழுதுபோக்கு வசதிகள் தொடர்பான பகுப்பாய்வு

| Entertainment facility in hotel | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| **Entertainment facilities** | **Number of hotels** | | | | | | |
| | **2009** | **2010** | **2011** | **2012** | **2013** | **2014** | **2015** |
| Swimming pool | 1 | 1 | 3 | 4 | 6 | 6 | 6 |
| Bar | 1 | 4 | 4 | 6 | 6 | 7 | 7 |
| Gym | | | | 1 | 3 | 3 | 5 |
| Children park | | 1 | 1 | 1 | 2 | 2 | 2 |
| Garden | | 1 | 2 | 2 | 3 | 4 | 5 |
| Spa | | | | 1 | 1 | 1 | 1 |

மூலம் : களவாய்வின் மூலம் பெறப்பட்டது

சுற்றுலா விடுதிகளில் பொழுதுபோக்கு வசதிகள் ஓரளவு சீர்செய்யப்பட்ட ஒன்றாக காணப்படுகின்றன.

### 1.11 போக்குவரத்து வசதிகள் தொடர்பான பகுப்பாய்வு

| Transport facilities | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| Name of the hotels | 2006 | 2007 | 2008 | 2009 | 2010 | 2011 | 2012 | 2013 | 2014 | 2015 |
| Thalsevana | | | | | 6 | 6 | 8 | 9 | 12 | 13 |
| Jaffna heritage | | | | | | | 4 | 6 | 6 | 8 |
| Gnanams | | | | 3 | 3 | 4 | 4 | 6 | 6 | 6 |
| Green grass | | | | 1 | 2 | 2 | 3 | 3 | 4 | 6 |
| Us hotel | | | | | | | | | 2 | 4 |
| Pj hotel | | | | | | | | 1 | 2 | 2 |
| Lux etoiles | 1 | 1 | 1 | 3 | 4 | 4 | 5 | 5 | 5 | 6 |
| Subash | | | | | | | 4 | 4 | 7 | 8 |
| Tilko Jaffna city | | | | | 2 | 3 | 5 | 6 | 6 | 9 |
| **Total** | **1** | **1** | **1** | **7** | **17** | **19** | **33** | **40** | **50** | **63** |

மூலம் : களவாய்வின் மூலம் பெறப்பட்டது

போக்குவரத்து வசதிகள் ஆரம்பத்தை விட 2010 இற்க பின்னர் அதிகரித்ததாக காணப்படுகின்றது. அத்துடன் US Hotel சுற்றுலா விடுதியில் 2014 இற்கு பின்னர் போக்குவரத்து வசதிகள் ஏற்படுத்தப்பட்டதாக தெரிவிக்கப்படுகின்றது,

### 1.12 உணவு தொடர்பான பகுப்பாய்வு

| Type of food | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| Food available | Number of hotels | | | | | | |
| | 2009 | 2010 | 2011 | 2012 | 2013 | 2014 | 2015 |
| Jaffna style food | 2 | 5 | 5 | 7 | 8 | 9 | 9 |
| Srilankan food | 2 | 5 | 5 | 7 | 8 | 9 | 9 |
| Indian food | 2 | 4 | 4 | 5 | 5 | 6 | 9 |
| Italian food | | 1 | 2 | 3 | 3 | 3 | 6 |
| Chinese food | | 1 | 2 | 4 | 4 | 4 | 5 |
| Western food | 2 | 3 | 5 | 5 | 6 | 6 | 8 |

மூலம் : களவாய்வின் மூலம் பெறப்பட்டது

உணவு தொடர்பான பகுப்பாய்வில் Jaffna style food, Sri Lankan food, Indian food, Wester food என்பன சுற்றுலா விடுதிகளில் கிடைக்கக்கூடியதாக உள்ளது. Italian food, chinese food என்பன சுற்றுலா விடுதிகளில் 2009 காலப்பகுதியில் கிடைக்கப்பெறவில்லை.

### 1.13 உணவு வழங்கல் முறை தொடர்பான பகுப்பாய்வு

| Food service method | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| Food service method | Number of hotels | | | | | | |
| | 2009 | 2010 | 2011 | 2012 | 2013 | 2014 | 2015 |
| Plate services | 3 | 5 | 5 | 7 | 8 | 9 | 9 |
| Buffe service | 2 | 3 | 3 | 4 | 5 | 5 | 9 |
| Self service | 1 | 1 | 1 | 2 | 3 | 3 | 7 |

மூலம் : களவாய்வின் மூலம் பெறப்பட்டது

சுற்றுலா விடுதிகளில் மொழியானது முதன்மையாக காணப்பட்டமையால் Tamil, Sinhala, English, French முதலான மொழி பேசக்கூடியவர்களாகவே வேலைக்கு அமர்த்தியுள்ளனர்.

### 1.8 சுற்றுலா வழிகாட்டி தொடர்பான பகுப்பாய்வு

| Trained Staff of Hotel | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| Name of the hotels | 2006 | 2007 | 2008 | 2009 | 2010 | 2011 | 2012 | 2013 | 2014 | 2015 |
| Thalsevana | | | | | 4000 | 4500 | 5000 | 5000 | 5500 | 5500 |
| Jaffna Heritage | | | | | | | 5500 | 6500 | 7500 | 8500 |
| Gnanams | | | | 2000 | 2500 | 3000 | 3000 | 3200 | 3500 | 3800 |
| Greengrass | | | | 2000 | 2500 | 3000 | 3500 | 4000 | 4400 | 4400 |
| US Hotel | | | | | | | | | 5000 | 5500 |
| PJ Hotel | | | | | | | | 5000 | 7000 | 9000 |
| Luxetoiles | 1800 | 2000 | 2500 | 3000 | 3500 | 3500 | 3500 | 4070 | 4070 | 4070 |
| Subash | | | | | | | 4000 | 4500 | 4500 | 5000 |
| Tilko Jaffna City | | | | | 3000 | 3500 | 4000 | 4500 | 5000 | 6000 |

மூலம் : களவாய்வின் மூலம் பெறப்பட்டது

ஆரம்பத்தில் அறைகளின் வாடகை Luxetoiles சுற்றலா விடுதியை தவிர ஏனைய சுற்றலா விடுதிகளில் காணப்படவில்லை. அத்துடன் அறைகளிற்கான கட்டணம் அறவீடானது ஆரம்பத்தை விட 2012 இற்கு பின்னர் அதிகரித்ததாகவே காணப்படுகின்றது.

1.15 சுற்றுலா விடுதிகளின் மொழி வளர்ச்சி

| Language skills of hotels | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| Language | 2009 | 2010 | 2011 | 2012 | 2013 | 2014 | 2015 |
| Tamil | 3 | 5 | 5 | 7 | 8 | 9 | 9 |
| Sinhala | 1 | 2 | 2 | 7 | 7 | 9 | 9 |
| English | 3 | 5 | 5 | 7 | 8 | 9 | 9 |
| french | 0 | 1 | 1 | 3 | 3 | 3 | 4 |

மூலம் : களவாய்வின் மூலம் பெறப்பட்டது

சுற்றுலா விடுதிகளில் மொழியானது முதன்மையாக காணப்பட்டமையால் Tamil, Sinhala, English, French முதலான மொழி பேசக்கூடியவர்களாக உள்ளனர்.

## 2. சுற்றுலா விடுதிகள் பகுப்பாய்வு

| சுற்றுலா விடுதிகள் எதிர் நோக்கும் சவால்கள் | விடுதிகளின் எண்ணிக்கை | விகிதாசாரம் |
|---|---|---|
| சுற்றுலா மையங்களிற்கு அண்மையில் விடுதிகள் அமையாமை | 08 | 88.8 % |
| குடியிருப்புக்களிற்கு அண்மையில் தங்குமிடங்கள் அமைந்துள்ளமை | 07 | 77.7 % |
| வாகனத்தரிப்பிடத்திற்கான போதிய இடவசதி இன்மை | 07 | 77.7 % |
| பொழுதுபோக்கு வசதிகள் பற்றாக்குறை | 07 | 77.7 % |
| அந்நியமொழிகள் தெரிந்த பணியாளர்கள் பற்றாக்குறை | 08 | 88.8 % |
| பயிற்சியளிக்கப்பட்ட பணியாளர்கள் பற்றாக்குறை | 05 | 55.5 % |
| விடுதி முகாமை பற்றிய போதிய அறிவுள்ளவர்கள் பற்றாக்குறை | 05 | 55.5 % |
| பணியாளர்கள் நிரந்தரமாக வேலை செய்யாமை | 08 | 88.8 % |
| சுற்றுலா விடுதித்துறையில் பெண்களின் பங்களிப்பு குறைவாகக் காணப்படுகின்றமை | 08 | 88.8 % |
| விடுதிகளினை விஸ்தரிப்பதற்கான மூலதனப் பற்றாக்குறை | 04 | 44.4 % |
| உட்கட்டுமான வசதிகளில் உள்ள குறைபாடுகள் | 09 | 100 % |
| பருவகால வியாபாரமாக காணப்படுகின்றமை | 08 | 100 % |
| பருவ காலங்களில் தங்குமிடப் பற்றாக்குறை | 09 | 100% |
| யாழ் மாவட்டத்தில் உள்ள சுற்றுலா வளவாய்ப்புக்கள் விருத்தி செய்யப்படாமை | 04 | 44.4% |
| சுற்றுலா விடுதிகளிற்கான தரங்களினை வழங்குவதில் அரச அலுவலகங்களில் காலதாமதம் | 07 | 77.7% |
| துரித உணவுச்சாலைகளின் தோற்றம் உணவு விடுதிகளில் உள்ள உணவுகளின் தரம் குறைவாகக் காணப்படல் | 06 | 66.6% |

யாழ் மாவட்டத்தின் வலிகாமமப் பிராந்தியத்தில் உள்ள Tilko Jaffna City Hotel, Green Grass Hotel, U.S Hotel, P.J Hotel, Jaffna Heritage Hotel, Gnanams Hotel. Subash Hotel, Hotel LuxEtoiles, Thalsevena ஆகிய சுற்றுலா விடுதிகள் எதிர்நோக்கும் சவால்கள் பற்றிய பகுப்பாய்வில் சுற்றுலா விடுதிகள் ஒவ் வொன்றும் ஏதாவது ஒரு பிரச்சியினைக் கொண்டுள்ளதாகவே அமைந்துள்ளது.

**பகுப்பாய்வும் கலந்துரையாடலும்**

ஆய்வின் போது கருதுகோள்களின் படி யாழ் மாவட்டத்தில் யுத்தத்தின் பின்னர் சுற்றுலா விடுதிகளில் வளர்ச்சி ஏற்பட்டுள்ள துடன் யாழ் மாவட்டத்தில் உள்ள சுற்றுலா விடுதிகள் பல்வேறு வகையான சவால்க ளையும் எதிர்கொண்டு வருகின்றன என்பது தரவுப்பகுப்பாய்வுகளினூடாக அறியக் கூடி யதாக உள்ளது.

ஆய்வு செய்யப்பட்ட ஒன்பது சுற்றுலா விடுதிகளில் 2 விடுதிகள் 1980 களிற்கு முற்பட்ட காலங்களில் தோற்றம் பெற்று யுத்தகாலங்களில் அழிவடைந்து யுத்தம் முடிவடைந்த பின்னர் சுற்றுலாப் பயணிகளின் வருகை அதிகரித்ததன் காரணமாக மீண்டும் ஆரம்பிக்கப்பட்டவை யாகவும், ஒரு விடுதி யுத்தத்திற்கு முன்னர் தோற்றம் பெற்று இன்றுவரை இயங்கிக் கொண்டு வருவதாகவும், மிகுதி 6 விடுதி களும் யுத்தம் முடிவடைந்ததன் பின்னர் தோற்றம் பெற்றவையாகக் காணப்படு கின்றன. எனவே யுத்தத்தின் பின்னர் அதிகளவான விடுதிகள் தோற்றம் பெற்றமை யாழ் மாவட்டத்தில் யுத்தத்தின் பின்னர் சுற்றுலா விடுதிகளின் வளர்ச்சியினை காட்டுவதாக அமைகிறது.

மேலும் இவ் விடுதிகளில் அறைக ளின் எண்ணிக்கை, அறைகளில் காணப் படக்கூடிய வசதிகள், மண்டபவசதிகள், ஊழி யர்கள், பயிற்றப்பட்ட ஊழியர்கள், சுற்றுலா வழிகாட்டிகள், விடுதிகளில் தங்கும் சுற்றுலாப் பயணிகள், பொழுதுபோக்கு வசதிகள், விடுதிகளில் உள்ள போக்கு வரத்து வசதிகள், விடுதிகளில் வழங்கப் படுகின்ற உணவு வகைகள், உணவு வழங்கல் முறைகள், பணியாளர்களின் மொழி என்பவற்றில் வளர்ச்சி ஏற்பட்டுள் ளதையும் காணக்கூடியதாக உள்ளது.

யுத்தத்திற்கு முற்பட்ட காலங் களில் சுற்றுலா விடுதி அறைகளில் படுக்கை வசதி, தொலைக்காட்சி, என்ப னவும் தனியான குளியலறையும் காணப் படவில்லை. ஆனால் தற்போது தனித்தனி குளியலறை வசதியுடன் கூடிய அறைகள், குளியலறையில் சுடுநீர் வசதிகள், என்பனவும் காணப்படுகின்றன. wifi இணையவசதி, உள்ளகத்தொடர்பு சாதனம், பாதுகாப்பு அலுமாரி போன்ற வசதிகள் விரிவுபடுத் தப்பட்டுள்ளமை. யுத்தத்திற்கு பின்னர் சுற்றுலா விடுதிகளின் வளர்ச்சியைக் காட்டுகிறது.

சுற்றுலா விடுதிகளின் வசதிகள் அதிகரிக்க அங்கு பணியாற்றும் பணி யாளர்களும் ஒன்று இரண்டு பயிற்சி யளிக்கப்பட்ட பணியாளர்களும் காணப் பட்டனர். ஆனால் தற்பொழுது அதிகள வான விடுதிப்பணியாளர்களுடன் பயிற்சி அளிக்கப்பட்ட பணியாளர்களும் காணப் படுகின்றனர். 2009ஆம் ஆண்டு காலப் பகுதியில் பயிற்சி அளிக்கப்பட்ட பணி யாளர்கள் 6ஆகக் காணப்பட்டது. ஆனால் 2015 ஆம் ஆண்டில் 178 பயிற்றப்பட்ட பணியாளர்கள் காணப்படுகின்றனர். பயிற் சியற்ற பணியாளர்களுக்கு வேலையின் போது பயிற்சி வழங்கப்படுவதும் குறிப்பி டத்தக்கது.

யுத்தத்திற்கு முற்பட்ட காலங் களில் ஓரிரு சுற்றுலா விடுதிகள் காணப் பட்டாலும் அங்கு பொழுதுபோக்கு வசதிகள் காணப்படவில்லை. தங்குமிடங் களினையும் உணவு விடுதியினையும்

கொண்டதாகவே சுற்றுலா விடுதிகள் காணப்பட்டன. தற்பொழுது சில விடுதிகளில் நீச்சற் தடாகம், மதுபானகூடம், உடற்பயிற்சி கூடம், சிறுவர் விளையாட்டரங்கு போன்ற பொழுதுபோக்கு வசதிகள் விரிவுபடுத்தப் பட்டுள்ளது. நீச்சற்தடாகம் 2009ஆம் ஆண்டில் ஒரு விடுதியிலும் 2015ஆம் ஆண்டு 6 விடுதிகளிலும் காணப்படுகிறது. இருப்பினும் பொழுதுபோக்கு வசதிகள் யாழ் மாவட்டத்தில் உள்ள விடுதிகளில் விரிவு படுத்த வேண்டிய தேவை காணப்படுகிறது.

மேலும் உணவுவிடுதிகளில் யுத்தத்திற்கு முற்பட்ட காலங்களில் யாழ்ப்பாண உணவுகள் மற்றும் இலங்கை உணவுகள் மட்டுமே வழங்கப்பட்டன. ஆனால் தற்பொழுது இந்திய உணவுகள், இத்தாலிய உணவுகள், மேலைத்தேய உணவுகள் போன்றன வழங்கப்படுகின்றன. இந்திய உணவுகள் 2009ஆம் ஆண்டு 2 விடுதிகளிலும் 2015ஆம் ஆண்டு 9 விடுதிகளிலும் வழங்கப்படுகிறது. இத்தாலிய உணவுகள் 2000ஆம் ஆண்டு எந்த விடுதிகளிலும் வழங்கப்படவில்லை. 2015ஆம் ஆண்டில் 4 விடுதிகளில் வழங்கப்படுகிறது. சீன உணவுகள் 2009ஆம் ஆண்டு எந்த விடுதிகளிலும் வழங்கப்படவில்லை. 2015ஆம் ஆண்டு 5 விடுதிகளில் வழங்கப்படுகிறது. மேலைத்தேய உணவுகள் 2009ஆம் ஆண்டு 2 விடுதிகளிலும் 2015ஆம் ஆண்டு 8 விடுதிகளிலும் வழங்கப்படுகிறது. உணவு வழங்கல் முறைகளாக முன்னர் தட்டுக்களில் பரிமாறும் முறையே காணப்பட்டது. தற்பொழுது சுயசேவை பரிமாறல் முறை, buffet முறை போன்ற முறைகளில் உணவு வழங்கல் நடைபெறுகிறது. இருப்பினும் உணவுகளின் தரங்களினை அதிகரிக்க வேண்டிய அவசியம் காணப்படுகிறது.

இவ்வாறு சுற்றுலா விடுதிகளின் கட்டமைப்பு, வசதிகள் மற்றும் சேவைகளில் ஏற்பட்ட வளர்ச்சி, யாழ் மாவட்டத்தில் யுத்தத்திற்கு பின்னர் சுற்றுலா விடுதிகள் வளர்ச்சி அடைந்துள்ளன என்பதனை காட்டுகின்றது. இவ்வாறான வளர்ச்சி சுற்றுலா விடுதிகளில் காணப்பட்டாலும் யாழ் மாவட்டத்தில் உள்ள சுற்றுலா விடுதிகள் பலவகையான சவால்களுக்கும் முகம் கொடுத்து வருகின்றன என்பதும் குறிப்பிடத் தக்கது. யாழ் மாவட்ட சுற்றுலா விடுதிகளின் பணியாளர்கள் தொடர்பாகவும் இட அமைவு தொடர்பாகவும் விடுதியின் பொழுதுபோக்கு வசதிகள் தொடர்பாகவும் பல்வேறு சவால்களை எதிர்கொண்டு வருகின்றமை தொடர்பாகவும் தரவுப்பகுப்பாய்வில் பகுப்பாய்பட்டது. உட்கட்டுமான வசதிகளில் உள்ள குறைபாடுகள், பருவகால வியாபாரமாக காணப்படுகின்றமை, பருவ காலங்களில் தங்குமிடப்பற்றாக்குறை, யாழ் மாவட்டத்தில் சுற்றுலா வள வாய்ப்புகள் விருத்தி செய்யாமை போன்ற சவால்களை 100% ஆன விடுதிகள் எதிர்கொள்கின்றன.

மேலும் சுற்றுலா மையங்களிற்கு அருகில் விடுதிகள் அமையாமை, பயிற்றப்பட்ட பணியாளர்கள் பற்றாக்குறை, சுற்றுலா விடுதித்துறையில் பெண்களின் பங்களிப்பு குறைவாகக் காணப்படல் போன்ற சவால்களை 88.88%ஆன விடுதிகள் எதிர்கொள்கின்றன. பொழுதுபோக்கு வசதிகள் குறைவாகக் காணப்படுகின்றமை, அந்நிய மொழி தெரிந்த பணியாளர் பற்றாக்குறை, தரிப்பிட வசதிகள் பற்றாக்குறை போன்ற சவால்களை 77.77%ஆன விடுதிகளும் எதிர்கொள்கின்றன.

உணவு விடுதிகளில் உணவின் சுவை குறைவாகக் காணப்படல் என்ற சவாலை 66.66%ஆன விடுதிகள் எதிர்கொள்கின்றன. சுற்றுலா விடுதிகளிற்கான தரங்களினை வழங்குவதில் அரச நிறுவனங்களின் காலதாமதம் என்ற சவாலினை 44.44%ஆன விடுதிகள் எதிர் கொள்கின்றன. எனவே இவ் ஆய்வானது யாழ் மாவட்டத்தில் உள்ள

விடுதிகள் எதிர்கொள்ளும் சவால்க ளினை வெற்றி கொள்வதற்கு பின்வரும் பரிந்து ரைகளை முன்வைக்கிறது.

## முடிவுகளும் பரிந்துரைகளும்

சுற்றுலா விடுதிகளினை சரியான முறையில் திட்டமிட்டு எதிர்காலத்தில் அபி விருத்திகளை ஏற்படுத்தக்கூடிய வகையில் அமைத்தல். சுற்றுலா விடுதிகளினை சுற்றுலா மையங்களிற்கு அருகில் அமைப்பதன் மூலம் அதிகள வான சுற்றுலாப் பயணிகளினை உள்வாங்கக் கூடியதாகவும் வியாபாரத்தினை அதிகரிக்கக் கூடியதாகவும் இருக்கும். சுற்றுலா விடுதிகளினை குடியிருப்புக்களிற்கு அண்மையில் அமைக்காமல் அமைதியான சனநெரிசல் அற்ற இடங்களில் அமைத்தல்.

சுற்றுலா விடுதிகளில் பொழுது போக்கு வசதிகளினை அதிகரித்தல் மற்றும் கேளிக்கை வசதிகளினைக் கொண்டு வருதல் மூலம் வருமானத்தை அதிகரிப்பதுடன் மேலும் அபிவிருத்திகளினை மேற்கொள்வ தற்கும் உறுதுணையாக இருக்கும். யாழ் மாவட்டத்தில் விடுதி முகாமைத்துவ கற்கை நெறிக்கான கல்லூரிகளை நிறுவுவதன் மூலம் தரம் வாய்ந்த பணியாளர்களினை பெற்றுக் கொள்ளக்கூடியதாக இருக்கும். அத்தோடு அந்நியமொழி கற்கை நெறி களையும் வழங்குதல். யாழ் மாவட்டத்தில் உள்ள விடுதிகளில் பெரும் சவாலாக காணப்படுவது விடுதி முகாமை பற்றிய அறிவு முதலீட்டா ளர்களிடம் காணப்படாமை. இவர்கள் முதலீட்டினை செய்தாலும் விடுதி முகாமை பற்றிய அறிவுடையவர்களிடம் கால ஒப்பந்த அடிப்படையில் விடுதிகளினை முகாமை செய்வதற்கு அனுமதித்தல்.

பணியாளர்களுக்கு தகுந்த ஊதியங் களினையும் சில இலவச வசதிகளினையும் அதாவது மருத்துவ வசதி, தங்குமிட வசதி போன்றவற்றை வழங்குவதன் ஊடாக பணியாளர்களினை விடுதியில் தக்கவைத் துக் கொள்ள முடியும். யாழ் மாவட்டத்தில் சுற்றுலாவள வாய்ப்புக்கள் அதிகமாகக் காணப்படுகின்ற போதும் அவை பராமரிப் பற்ற நிலையில் காணப்படுகின்றன. அவற்றினை விருத்தி செய்வதன் மூலம் யாழ் மாவட்டத்திற்கான சுற்றுலாப்பயணிகளின் வருகையை அதிகரிக்க முடியும். இதனால் சுற்றுலா விடுதிகளிற்கு அதிகளவான சுற்றுலாப் பயணிகளை தக்கவைக்க முடியும். சுற்றுலா விடுதிகளில் வாகனத்தரிப்பிடம் மிக முக்கியமானதாகக் காணப்படுகின்றது. எனவே விடுதிகளினை அமைக்கும் போது வாகனத்தரிப்பிடங்களினை திட்டமிட்டு பாதுகாப்பான முறையில் அமைப்பதன் மூலம் வாகனத்தரிப்பிடம் தொடர்பாக எதிர் நோக்கும் சவால்களை வெற்றி கொள்ள முடியும். யாழ் மாவட்டத்தை பொறுத்த வரையில் சுற்றுலா விடுதித்துறையில் பெண்களின் பங்களிப்பு குறைவாக காணப் படுகின்றது. சமூகத்தில் விடுதிகள் பற்றிய தெளிவான விளக்கங்கள், விழிப்புணர்வுகள் ஏற்படுத்தி விடுதிகள் பற்றிய தவறான எண்ணக்கருக்களை மாற்றுவதன் மூலம் பெண்களினை இத்துறைக்கு உள்வாங்க முடியும்.

யாழ் மாவட்டத்தில் சுற்றுலா விடுதி களிற்கான ஒன்றியம் ஒன்றினை நிறுவுவதன் மூலம் யாழ் மாவட்டத்தில் உள்ள அனைத்து சுற்றுலா விடுதிகளும் இணைந்து சுற்றுலா விடுதித் துறையினை வளர்ப்பதற்கான நடவடிக்கைகளினை மேற்கொள்ள முடியும். சுற்றுலா விடுதிகளில் காணப்படும் உணவு விடுதிகளில் சிறந்த தலைமை உணவுத் தயாரிப்பாளர்களினை (chef) வேலைக் கமர்த்தி உணவின் தரத்தினை அதிகரிப்பதன் மூலம் அதிகளவான வாடிக்கையாளர்களை பெற்றுக்கொள்ளக் கூடியதாக இருக்கும். விடுதிகளின் அலங்காரம் உள்ளூர் உற்பத் திகளைக் கொண்டு அமைப்பதன் மூலம் வினைத்திறனுடைய அலங்கார அமைப்பினை வளர்த்துக் கொள்ளக் கூடியதாகவும் விற்ப

னைக்கு அறிமுகப்படுத்தும் முகமாகவும் வளர்த்துக் கொள்ளமுடியும்.

## Reference

01.தங்கமணி.ம.ரா.(2000), 'சுற்றுலாவியல் ஓர் அறிமுகம், இலங்கை.

02.சின்னத்தம்பி.மா.(1991), 'சுற்றலாத்துறை அபிவிருத்தியும் இலங்கை பொருளாதாரத்தின் மீதான அதன் தாக்கங்களும், கொழும்பு, இலங்கை.

03.சில்வாடி.டி.(1978), "ஸ்ரீலங்காவின் ஹோட்டல் துறையும் அதன் பரிணாமமும் பயன்படுத்தும் அறைத் தேவையும்" கொழும்பு, இலங்கை

04.சுஜிதா சிவநேசன், (2010), 'யாழ் நகரில் சுற்றுலாத் தங்குமிடங்களுக்கும் வாய்ப்புக் களும், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை

05.Murray Mackenzie, (2012), 'introduction to hospitality' Hong Kong Polytechnic University.

06.Http//publicationist org/data/abrest - 38/ABR vo/2 No 2 NAS - pdf

07.Http://www2.uwstout.edu/content/lib/thesis /2001/2001 yuns.pdf

08.Australian bureau of statics (ABS) 1998, 'Tourist Accommodation' recuments/ change.

09.Helen atkiason Jackie brander brown, (2005), 'Rethinking Performance measures: assures assessing progress in uk Hotels', International journal of contemporary hospitality management.

10.https//ta.m.wikipedia.org/wiki/Genev, (2010), Developments and Challenges in the Hospitality and tourism sector' Retired form www.ilo.org/wemp5/groups/public/documents.

11.சுதந்திர இலங்கையின் பொருளாதார முன்னேற்றம், (2000), இலங்கை மத்திய வங்கி கொழும்பு, இலங்கை.